பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 05 2025                                    7 15

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடிவடையவில்லை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பாதுகாப்புப் படைகளின் அனைத்துப் பிரிவுகளிலும் பெண்கள் முத்திரை பதித்து வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் 62 கோடி பேர் பயனடைந்திருப்பதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா தெரிவித்துள்ளார்.

4. உச்சநீதிமன்றத்திற்கு 3 புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

5. ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 2 தங்கப்பதக்கங்களை வென்றது.

*--இனி விரிவான செய்திகள்--*

ஆபரேஷன் சிந்தூர் இன்னும் முடிவடையவில்லை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் **Alipurduar** –ல் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக  பாகிஸ்தானுக்குள்ளேயே இந்தியா தாக்குதல் நடத்தியுள்ளதாக அவர் கூறினார்.

தீவிரவாதத்திற்கு ஆதரவாக செயல்படுவோருக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் நமது பாதுகாப்புப் படையின் வலிமையை உணர்த்தியிருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து பீகார் சென்ற திரு நரேந்திர மோடி பாட்னா விமான நிலையத்தின் புதிய முனையத்தையும் திறந்து வைத்தார்.

>><><><><<

பாதுகாப்புப் படைகளின் அனைத்துப் பிரிவுகளிலும் பெண்கள் முத்திரை பதித்து வருவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

கோவாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஆபரேஷன் சிந்தூர் வெற்றியில் பெண்களின் பங்களிப்பும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டார்.

விமானிகளாக, படை வீரர்களாக அவர்கள் ஆற்றிய பணி பாராட்டத்தக்கது என்றும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

>><><><><<

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு உயர்ந்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தொலைத் தொடர்பு, பாதுகாப்பு, மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் இந்தியா முன்னிலையில் உள்ளதாக கூறினார்.

மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளாக மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>><><><><<

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் 62 கோடி பேர் பயனடைந்திருப்பதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பின் வருடாந்திர வர்த்தக உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களும் இந்த திட்டத்தின் மூலம் பயடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுவரை 9 கோடியே 44 லட்சம் பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இத்திட்டத்தின்கீழ் இலவச சிகிச்சை பெற்றுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

உலகின் மிகப்பெரிய மருத்துவக் காப்பீடு திட்டமாக இது திகழ்கிறது என்றும் திரு ஜே பி நட்டா தெரிவித்தார்.

>><><><><<

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் நாடுமுழுவதும் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

15 நாட்கள் நடைபெறவுள்ள இந்த இயக்கத்தின்கீழ் வேளாண் விஞ்ஞானிகள் 700 மாவட்டங்களுக்கு உட்பட்ட கிராமங்களில் பயணம் மேற்கொண்டு நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்து விவசாயிகளிடம் எடுத்துரைக்கவுள்ளனர்.

இதற்காக 16 ஆயிரம் விஞ்ஞானிகளை கொண்ட குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் நாளொன்றுக்கு 2 கிராமங்களில் பயணம் மேற்கொண்டு விவசாயிகளிடம் நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைக்கவுள்ளன.

தமிழகத்தின் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 45 கிராமங்களில் இந்த இயக்கம் மேற்கொள்ளவுள்ளதாக வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானி திரு சுரேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சுரேஷ் - 36 செகண்ட்ஸ்)

இந்த இயக்கத்தின் கீழ், டிரோன் மற்றும் நானோ யூரியா பயன்பாடு குறித்து விவசாயிகளிடம் எடுத்துரைக்கப்பட்டதாக வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் திரு ஆனந்தன் கூறினார்.

(சவுண்ட் பைட் - ஆனந்தன் - 40 செகண்ட்ஸ்)

நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து இந்த இயக்கத்தின்கீழ் எடுத்துரைக்கப்பட்டதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பயனாளி - 22 செகண்ட்ஸ்)

>><><><><<

தேசிய கல்விக் கொள்கையில் தாய்மொழி வழிக்கற்றலுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்திய புள்ளியியல் சேவை பயிற்சி அதிகாரிகளிடையே கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய கல்விக்கொள்கை காரணமாக தொழில்நுட்ப படிப்புகளும் தாய்மொழியில் கற்பிக்கப்படுவதாக திரு ஜெக்தீப் தன்கர் தெரிவித்தார்.

>><><><><<

உச்சநீதிமன்றத்திற்கு 3 புதிய நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு **N V Anjaria,**

கவுகாத்தி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு விஜய் **Bishnoi,** மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி திரு **Chandurkar,** ஆகியோர் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

>><><><<

கோதுமை பதுக்கலை கட்டுப்படுத்தும் நோக்கில் மொத்த மற்றும் சில்லரை விற்பனையாளர்களுக்கான உச்சவரம்பை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

இதன்படி, மொத்த விற்பனையாளர்களுக்கான கோதுமை கையிருப்பு உச்சவரம்பு3 ஆயிரம் மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சில்லரை விற்பனையாளர்களை பொறுத்தவரை இது 10 மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

>><><><<

தேர்தல் பணிகளை மேலும் செம்மையாக மேற்கொள்வதற்கு ஏதுவாக கடந்த 100 நாட்களில் 21 புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி, வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பணிகளில் சீர்திருத்தங்கள் போன்றவை இதில் அடங்கும்.

>><><><<

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 11 ஆவது நிதி ஆணையம் இன்று ஆய்வு மேற்கொண்டது.

டாக்டர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான இந்தக் குழு, Deoghar –ல் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுடன் இன்று ஆய்வு மேற்கொண்டது.

ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

>><><><<

7-ஆவது மாநில நிதி ஆணையத்தை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

ஓய்வு பெற்ற ஐ ஏ எஸ் அதிகாரி திரு அலாவுதீன் தலைமையிலான இந்த குழுவில் 4 உறுப்பினர் மற்றும் ஒரு உறுப்பினர் செயலர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழு தனது அறிக்கையை ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கும் என்று மாநில அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><<

அமர்நாத் யாத்திரையின் போது துணை ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஜூலை மாதம் 3 ஆம் தேதி யாத்திரை தொடங்கவுள்ள நிலையில் ஜம்மு கஷ்மீரில் 581 கம்பெனிகள் துணை ராணுவப்படையினரை அதற்கான பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

அமர்நாத் யாத்திரை மேற்கொள்ளும் யாத்ரீகர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

நியூசிலாந்து துணைப் பிரதமர் திரு **Winston Peters** இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா ஆகியோரை திரு **Winston Peters** சந்தித்துப் பேசவுள்ளதாக வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் திரு **Randhir Jaiswal** கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இருநாடுகளுக்கு இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்த நியூசிலாந்து துணைப்பிரதமரின் பயணம் உதவிடும் என்று தெரிவித்துள்ளார்.

>><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 2 தங்கப்பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவின் குமியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் 3 ஆயிரம் மீட்டர் **Steeple Chase** பிரிவில் **Avinash Sabel** –லும், மகளிர் 100 மீட்டர் ஓட்டப்பிரிவில் **Jyothi Yarraji** தங்கப்பதக்கம் வென்றனர்.

>><><><<

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் அணி இன்று பெங்களுரு அணியை எதிர்கொள்கிறது.

மொஹாலியில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களுரு அணி முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இப்போட்டியில் வெற்றி பெறும் அணி நேரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

>> <<